செய்தி வெளியீடு எண்: 436 நாள்: 19.07.2019

<u>செய்தி வெளியீடு</u>

# மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில், கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் இன்று (19.07.2019) வழங்கினார்.

போக்குவரத்துத் துறையின் ஒரு அங்கமாக இயங்கிவரும் தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் சார்பில் அனைத்து அரசு துறைகளின் வாகனங்களின் பராமரிப்புப் பணிகளை திறம்பட மேற்கொண்டு வருகிறது. இம்மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறையில் பணியில் இருந்த பொழுது உயிரிழந்த சென்னை, திருச்சி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மூன்று அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளருக்கான பணி நியமன ஆணையினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (19.07.2019) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது போக்குவரத்துத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மற்றும் மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறையின் இயக்குநர் (பொறுப்பு) திரு.கே.செந்தில்வேல் ஆகியோர் உடன் இருந்தனர்.

இயக்குநர் (பொறுப்பு)
மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9